மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு,

**முன்னிலை : திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

நிறைவேற்றுகை விண்ணப்ப எண்.3/2024

உள்

நிறைவேற்றுகை விண்ணப்ப எண்.1/2024

உள்

நிறைவேற்றுகை மனு எண்.1/2024

உள்

அசல் வழக்கு எண்.371/1983

கிருஷ்ணசாமி ... மனுதாரர்/ மனுதாரர் / ஆட்சேபணைதாரர்

/எதிர்/

1. செல்வகுரு (இறந்துவிட்டார்)
2. தியாகராஜன் (இறந்துவிட்டார்)
3. சண்முகநாதன்
4. ஜெயம்மாள்
5. அசோதையம்மாள் (இறந்துவிட்டார்)
6. டி.தேவிகாரணி என்ற தேவி
7. டி.ஜோதிவேல்
8. டி.செந்தில்
9. டி. சுந்தரமகாலிங்கம்
10. யோகப்பழம்
11. சண்முகப்பிரியா .... எதிர்மனுதாரர்கள் / வாதிகள் / 6 முதல் 11 மனுதாரர்கள் இறந்துபோன 2 ம் வாதியின் வாரிசுகள்
12. சூரியன் என்ற காந்தி (இறந்துவிட்டார்)
13. ரத்தினம் ஆசாரி (இறந்துவிட்டார்)
14. வேலாண்டி ஆசாரி
15. தமிழக அரசு, அதன் மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர் மாவட்டம் மூலம்
16. பெருமாள்
17. பாண்டிமுருகன்
18. துரைபாண்டி ... 12 முதல் 18 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 1 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

19. ஞானசிகாமணி
20. அய்யனார் .... எதிர்மனுதாரர்கள்/ 1 ம்எதிர்மனுதாரரின் வாரிசுகள்

21. மாரியப்பன்
22. விஜயலட்சுமி
23. சண்முகப்பிரியா
24. அருண்மொழி
25. தமிழ்சுடர்
26. தமிழ்செல்வி .... எதிர்மனுதாரர்கள்/ 5ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

27. சாந்தி
28. சுமதி
29. சௌமியாபானுமதி

(5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் இறந்த 1ம் எதிர்மனுதாரருக்கு உயர்நீதிமன்ற C.M.P.No.1 to 3/07 ல் 21.01.2009ம் தேதிய உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளனர்)

(19 முதல் 23 எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளாக இ.ம.எண்.6/2024ன் படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளார்கள்.)

(24 முதல் 29 எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 5ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளாக இ.ம.எண்.11/2024ன் படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளார்கள்.)

(இ.ம.எண்.17/2025ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிப்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இம்மனுவானது கடந்த 5.12.2022ம் தேதி திருவில்லிபுத்தூர், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நீதிமன்றத்தில் நிறைவேற்றுகை மனு எண். 19/10 உள் நிறைவேற்றுகை விண்ணப்ப எண் 282/14 உள் நிறைவேற்றுகை விண்ணப்ப எண் 3/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆள்வரை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கடந்த 23.10.2024ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றாதரப்பினராக்கப்பட்டு இருந்த நிலையில், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.....

## உத்தரவு

இவ்வழக்கில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் வேண்டி மறுதிறப்பு (Re-open) செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனுவானது உ.வி.மு.ச.பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

2.1) இம்மனுவின் மனுதாரர் ஆவார். இ.ம.எண்.282/2014 மனுவில் மனுதாரர் / ஆட்சேபணைதாரர் ஆவார். விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அசல் வழக்கு எண்.31/2013 வழக்கில் கண்ட சொத்தை 11.03.2012ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற பின்பு தாவா சொத்திலிருந்த மண்சுவரிலான கூரை வீட்டை இடித்து அப்புறப்படுத்தப்படுத்திவிட்டு வத்ராப் பேரூராட்சியில் காரை வீடு கட்ட கட்டிட வரைபட அனுமதியும், அங்கீகாரமும் 31.07.2012ம் தேதியில் பெற்று வரிவிதிப்பு செலுத்தியும், மின் இணைப்பு பெற்றும் அனுபவித்து வரும் நிலையில், இ.பி.எண்.19/2010ல் கண்ட மனுதாரர்களோ, எதிர்மனுதாரர்களோ எவ்வித ஆட்சேபணையும் செய்தது கிடையாது.

2.2) மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.31/2013ல் ஐ.ஏ.எண்.178/13 என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் இம்மனுதாருக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர். இடைக்கால உறுத்துக்கட்டளை 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள் மீது பெறப்பட்டு, அசல் வழக்கு 31/2013 திருவில்லிபுத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, இ.பி.எண்.19/2010 மனுவிலுள்ள மனுதாரர்கள் தரப்பில் முதல் விசாரணை முடிக்கபப்டு, குறுக்கு விசாரணைக்காக 09.12.2022ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இ.ம.எண்.282/2014 மனு தாக்கல் செய்யப்பட்டு, இ.பி.எண்.19/2010 ல் தபசில் சொத்தானது இம்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் இ.பி.எண்.19/2010 மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளதில், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த 31.10.2022ம் தேதி வெளியூர் சென்றுவிட்ட காரணத்தினால் இ.ஏ.எண்.282/2014 மனுவில் இம்மனுதாரர் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே, கடந்த 31.10.2022ம் தேதியில் இம்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக முடிக்கப்பட்டதாக கூறி உத்தரவிற்காக 07.12.2022ம் தேதிக்கு ஏற்பட்டுள்ளதை மீண்டும் மறுதிறப்பு செய்து ஆவணங்கள்

குறியீடு செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனு மற்றும் அபிடவிட் பரிசீலிக்கப்பட்டது. உபய தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:-</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>6. தீர்வு முடிவு:-</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் E.A.1/2024 ல் கடந்த 31.10.2022 அன்று மனுதாரர் தரப்பு வாதுரைகள் முடிக்கப்பட்டதாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை மறுதிறப்பு செய்து, மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 25.11.2019 அன்று போடப்பட்ட வாய்தாவானது பல்வேறு ஒத்தி வைப்பிற்கு பின்பு கடந்த 31.10.2022 அன்று வாதுரைகள் கேட்கப்பட்டதாக முடித்து வைக்கப்பட்டுள்ளது. மனு மற்றும் அபிடவிட் ஆகியவைகளை ஆராய்ந்து பார்க்கையில், இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மறுதிறப்பு செய்ய கேட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் மனுதாரர்கள் தரப்பில் எந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முயல்கிறார்கள் என்று எங்கேயும் குறிப்பிட்டு கூறவில்லை.

25.11.2019 முதல் 31.10.2022 காலகட்டத்திற்கிடையே பல்வேறு வாய்தாக்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் இம்மனு தாக்கல் செய்யும் போது

மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் குறித்து எவ்வித வாதங்களும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுசொல்லாத பட்சத்திலும், தனியாக ஆவணங்களை ஏற்பதற்காக மனு தாக்கல் செய்யாத பட்சத்திலும், ஆவணங்களை சமர்ப்பிக்காத பட்சத்திலும், ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மறுதிறப்பு செய்ய கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், நீதிமன்றத்திலிருந்து பல்வேறு வாய்ப்புகள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், அதை முறையாக பயன்படுத்தாமல் தற்போது மீண்டும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக, மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய விரும்புகின்ற ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மறுதிறப்பு செய்ய கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது வழக்கை காலங்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது. மேலும், ஏற்கனவே முடித்து வைக்கப்பட்ட வாதுரைகளை மீண்டும் மறுதிறப்பு செய்ய எவ்வித நியாயமான காரணங்களையும் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்ய தவறியதால் இம்மனு Devoid of Merits. செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் நாள் பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI
Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u> இல்லை.

RAMANATHAN MOORTHI
Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.